அம்மா உன் சுகம் கேட்டு பிள்ளை பாடிடும் பாட்டு
என் தாயே உனக்கிணையேதம்மா
நாளும் என்முகம் பார்த்து அன்பால் என்னை காத்து
எனக்குயிர் தந்தனே தெய்வமம்மா

கரும்புலி வீரனாய் நான் இன்று மாறினேன்
கருவிலே நீ தந்த வீரமம்மா
புது விதி செய்திட புறப்படும் வேளையில்
தாய்மையை நினைந்திடும் நேரமம்மா

மண்ணுக்காய் வாழ்வேனே  மகிழ்வோடு சாவேனே
அன்னை மண்ணே என் சொந்தமம்மா
நெஞ்சுக்குள் தாகம்தான் வாழ்ந்திடும் ஈகம் தான்
சும்மா சாவதில் அர்த்தமில்லை
கண்ணீரை காணத வாழ்கையேயில்லை
கண்டுமே சோர்ந்தால் வெற்றிகள் இல்லை
ரத்தமே பாலாய் ஊட்டினாய் அம்மா
ரத்தமே சிந்தி வேல்கிறேன் அம்மா
அம்மா அழுதால் தீராது துன்பம்
வென்றால் நம் வாழ்வில் எல்லாம் இன்பம்

அம்மா உன் சுகம் கேட்டு பிள்ளை பாடிடும் பாட்டு
என் தாயே உனக்கிணையேதம்மா
நாளும் என்முகம் பார்த்து அன்பால் என்னை காத்து
எனக்குயிர் தந்தனே தெய்வமம்மா

நம்பிக்கை பொய்யாதே நம் கொள்கை சாகாதே
வீழும் போதும் வீரம் வீழ்வதில்லை
அண்ணனின் வழி போனேன் தேசத்தின் புயலானேன்
வாழும் வாழும் எங்கள் தியாகமம்மா
போராடி வெல்லாத போராட்டம் இல்லை
போரின்றி வாழ்வா இல்லவே இல்லை
விடை கூறு என்தாயே வென்றிட வாழ்த்து
வெடியாகி போவேன் ஏங்காதே கேட்டு
அம்மா போறாளே உன்பிள்ளையின்று
எனிமேல் தொடுவேனே காற்றாக இன்று

அம்மா உன் சுகம் கேட்டு பிள்ளை பாடிடும் பாட்டு
என் தாயே உனக்கிணையேதம்மா
நாளும் என்முகம் பார்த்து அன்பால் என்னை காத்து
எனக்குயிர் தந்தனே தெய்வமம்மா